**CC.419/2017.**
**P.W.1**

| | | |
|---|---|---|
| நடராஜன் | த/பெ. மகாராஜா | 23.03.2022 |

சாட்சி மனவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

**சம்பவ சமயத்தில் நான் திருக்குறுங்குடி வன சரகராக கூடுதல் பொறுப்பு வகித்ததற்கான உத்திரவு எனது அலுவலகத்தில் உள்ளதா என்றால் உள்ளது. எனக்கு கூடுதல் பொறுப்பு வழங்கி கள இயக்குனர், களக்காடு முண்டந்துரை புலிகள் காப்பகம் அவரால் உத்திரவிடப்பட்டது. எனக்கு கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டு நான் பொறுப்பில் இருக்கும்போதுதான இரகசிய தகவல் கிடைத்தது. அந்த உத்திரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். ரகசிய தகவல் கிடைத்த உடனேயே நான் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேனா என்றால் இல்லை, 23.06.2016 தேதி அதிகாலையில் சென்றேன். சம்பவ இடம் பாரஸ்ட் கல் எண்.18-ல் இருந்து எந்த திசையில் 135 மீட்டர் தூரத்தில் உள்ளது என்று நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை, கிழக்கு திசையில் உள்ளது. வனத்துறைக்கு சார்ந்த பாரஸ்ட் கல் எண்.18-கு அருகில் மற்ற நபர்களுக்கு சேர்ந்த தனியார் இடம் உள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள இயற்கை நீருற்று எங்கிருந்து உற்பத்தி ஆகி எங்கு செல்கிறது என்பது குறித்தும் அதன் விஸ்திரனம் குறித்தும் கூற இயலாது என்றால் அந்த இயற்கை நீருற்கு அந்த இடத்திலேயே சுனை போல் உருவாகி 25 அடி அகலம் மற்றும் 30 அடி நீளம் உள்ளது. இந்த விபரங்களை நமூனாவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் எதிரி குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வந்த இடத்தின் உரிமையாளர் பூமனி என்பவரை விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. பூமணிக்கு உரிமையான இடம் எந்த கிராமத்தில் எந்த புல எண்ணில் உள்ளது என்பது குறித்து விசாரித்தேனா என்றால் கிராம நிர்வாக அலுவலரிடம் விசாரித்தேன், புல எண்.884 திருக்குறுங்குடி கிராமம் ஆகும். அவ்வாறு விசாரித்த விபரத்தை நமூனாவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் என்ன பயிர் செய்யப்பட்டிருந்தது என்று நான் பார்க்கவில்லை. சம்பவ இடத்தை சுற்றி வேலி இல்லை. சம்பவ இடத்தில் இருந்து பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் அடித்து கொன்றதாக கூறப்படும் உயிரினத்தின் உடல் பாகங்களை நாங்கள் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரிகள் அடித்து கொன்றதாக கூறப்படும் உயிரினத்தை நான் பார்வையிட்டேனா என்றால் பார்வையிடவில்லை. பூமணி என்பவரின் இடத்திற்கு அருகில் உள்ள நிலங்களின் உரிமையார் யார் என்பது குறித்து நான் விசாரித்தேனா என்றால்**

விசாரிக்கவில்லை. சம்பவ இடத்தின் கொல்லப்பட்டதாக கூறப்படும் உயிரினம் இருந்ததற்கான தடயம் ஏதும் இருந்ததா என்றால் இல்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ரோந்து பணி எதுவும் செய்யவில்லை என்றும் நான் கூடுதல் பொறுப்பில் எந்த பணியும் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் 1வது எதிரியை சொன்னப்படி கைது செய்யவில்லை என்றம் அவர் என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 2ம் எதிரி 1ம் எதிரிக்கு சமையல் செய்ய எந்த உதவியும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கைப்பற்றிய பாத்திரத்தில் சமையல் செய்ததற்கான வாடை எதையும் நுகர்ந்து அறியவில்லை என்றால் சரிதான், பாத்திரங்கள் கழுவி வைக்கப்பட்டிருந்தன. பாத்திரங்கள் கழுவி வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு அருகில் உணவுமீதி எதுவும் இல்லை என்றால் சரிதான். எதிரி பருவம் செய்து வந்த இடம் வனத்துறைக்கு சேர்ந்த இடத்திற்கு அருகில் உள்ளது என்றால் சரிதான். நான் 1ம்எதிரியிடம் வலுக்கட்டாயமாக அவர் பருவம் செய்யும் பயிர்களை பெற்றுக் கொண்டேன் என்றால் சரியல்ல. எதிரி பணம் கொடுத்தால்தான் விவசாயம் செய்ய விடுவேன் என்று கூறினேன் என்றால் சரியல்ல. எதிரி பணம் தர மறுத்ததால் எதிரி செய்யாத தவறை செய்ததாக கற்பனையாக ஜோடித்து வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் எனக்கு கீழ் பணிபுரியும் வன அலுவலர்களை சாட்சியாக வைத்து இந்த வழக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல.